சமூக விஞ்ஞான கற்கை வட்டம்



செய்திமடல் - 14 | 25-08-2011

## 18-08-2011 அன்று நடந்த உரையாடலின் பொழிப்பு
## தலைப்பு : பெரிய புராணமும் அதன் அரசியலும்
## தொடக்கவுரையாடல் : சபா தனுஜன்

**அறிமுகமும் தோற்றப் பின்னணியும்**

பெரிய புராணம் அல்லது திருத்தொண்டர் புராணமானது, பக்தி இலக்கியங்கள் பல்கிப் பெருகிக் காணப்படும் தமிழ் மொழியில் தோன்றிய புராணங்களில் முற்று முழுதாகத் தமிழ்நாட்டினைத் தளமாகக் கொண்டெழுந்த, பெரும்பாலும் சாதாரண மக்களின் அக்கால வாழ்வைப் பின்னணியாகக் கொண்ட, இயற்கை அதீத நிகழ்வுகளை அதிகமாகச் சித்திரிக்காத ஒரு புராணமாகும். இதைச் சோளர் காலத்தில் தோன்றிய ஒரே ஒரு சைவத் தமிழ் வரலாற்றுக் கதை எனலாம்.

(கி.பி 9ஆம் நூற்றாண்டு - கி.பி 12 ஆம் நூற்றாண்டு வரையான காலப்பகுதி, காப்பிய காலம் எனவும் அழைக்கப்படுகின்றது)
இது சேக்கிழார் அல்லது அருண்மொழித் தேவர் (கி.பி 1133 - 1150) என்னும் அநபாயச் சோழனின் முதல் மந்திரியால், சுந்தரரின் திருத்தொண்டர் தொகை, நம்பியாண்டார் நம்பியின் திருத்தொண்டர் திருவந்தாதி ஆகியவற்றை முதல், வழி நூல்களாகக் கொண்டு உருவாக்கப்பட்டுள்ளது.

திருமலைச் சருக்கம் தொடக்கம் வெள்ளானைச் சருக்கம் வரையான 13 பகுதிகளைக் கொண்டிருக்கின்றது.

இத்தகைய ஒரு நூலின் தோற்றத்துக்கான காரணியாக சீவக சிந்தாமணி என்னும் சமணக் காப்பியத்தின்மீது மக்களுக்கும், மன்னனுக்கும் ஏற்பட்ட ஈர்ப்பினைக் கண்டு ஏற்பட்ட அச்சத்தின் காரணமாகச் சேக்கிழார் இதை இயற்றினார் என்பர்.

இதை இன்னொரு வகையில் நோக்கினால், பக்தி இயக்கத்தை நிறுவனமயப்படுத்தி, ஆவணப்படுத்துவதனூடாக மீள்வலியுறுத்தல் செய்வதன் மூலம் சைவத்தின் இருப்பைப் பாதுகாக்கின்ற நோக்கத்தைப் புரிந்துகொள்ள முடியும். அதனூடாகச் சேக்கிழார் நிலப்பிரபுத்துவ சமூகக் கட்டமைப்பைப் பாதுகாக்க விளைந்ததோடு, மக்கள் அனைவருக்குக்குமான இறைவனைப் படைத்துக் காட்டுவதன் மூலம் அனைவரையும் ஆண்மீகத்தில் கவனம் செலுத்த வைப்பதன் ஊடாக அரசனுக்கு எதிராகவோ, சமூக அடக்குமுறைக்கு எதிராகவோ மக்களைச் சிந்திக்கவோ செயற்படவோ விடாமல் திசைதிருப்ப முனைந்திருக்கின்றார். அத்துடன், இக்காலத்தில் மிகவும் வலுப் பெற்றிருந்த வணிக வர்க்கத்தின் அச்சுறுத்தலைக் குறைத்து அவர்களின் சமூக முக்கியத்துவத்தைக் குறைப்பதற்கு வைதீக மதங்களைப் பயன்படுத்த முடியும் என்பதும் கவனிக்கத்தக்கது.

**காவியமாக்கக் கையாண்ட வழிமுறை.**

தண்டியலங்காரம் கூறுகின்ற காவியத்துக்கான நிபந்தனைகளை மிகவும் சிரத்தையுடன் சேக்கிழார் நிவர்த்தி செய்ய விழைந்துள்ளமையைக் காணக்கூடியதாக உள்ளது.
தன்னிகரில்லாத் தலைவராகச் சுந்தரரைப் படைக்க முயன்றமை. அவரின் வரலாற்றை கைலாயத்தில் தொடங்கி, முக்தி அடைதல் வரை கொண்டு செல்லுதல். அவருக்கு அரசனொருவனை (சேரமான்) நண்பனாக்கியமை, அவரையும் அரச வாழ்வு வாழ்பவராகச் சி;த்திரித்தமை. அவரின் காதல், ஊடல் போன்றவற்றிற்கு அதிக முக்கியத்துவம் கொடுத்தமை.
திருநகரச் சிறப்பைச் சோளர்களின் (திரு)ஆரூரைப் பற்றியதாக அமைத்தல். சுந்தரர் பிறந்தது (திரு)முனைப்பாடி நாட்டின் (திரு)நாவலூரில். (திரு)ஆரூரைப் பாடியதை நியாயப் படுத்த சுந்தரருக்கு நம்பியாரூரா் என்ற பெயரைச் சேக்கிழார் வழங்கியுள்ளார்.

**சுந்தரர் காவியத் தலைவரானமை.**

ஆடியார்களுள் உயர்வு தாழ்வு பார்த்தல், அவர்களின் பக்தியின் ஆழத்தை அளத்தல் அநாகரீகமானபோதும் பெரிய புராணம் ஏன் அவர்களில் ஒருவரான சுந்தரரை முதன்மைப் படுத்தவேண்டி ஏற்பட்டது என நோக்கினால், அது

* முதன்நூல் தந்த நன்றிக்காக

(மிகுதி அடுத்த பக்கம்)


### எதிர்வரும் வாரங்களுக்கான தலைப்புக்கள்

25 - 08 -2011

**வரலாற்றுப் பொருள்முதல்வாதம்**
- சி. சிவசேகரம்

01 - 09 -2011

**பகவத் கீதை**
- ஐ. மனோறா



**லியோ டால்ஸ்டாய்** (Leo Tolstoy - Lev Nikolayevich Tolstoy, **செப்டம்பர்** 9, 1828 - **நவம்பர்** 20, 1910)
ஒரு ரஷ்ய எழுத்தாளர் ஆவார். இவர் புதின எழுத்தாளர்களுள் மிகச் சிறந்தவர்களுள் ஒருவராக மதிக்கப்படுகிறார். இவரது மிகச் சிறந்த ஆக்கங்களான போரும் அமைதியும், அன்னா கரேனினா ஆகியவை, 19 ஆம் நூற்றாண்டு ரஷ்ய வாழ்க்கையை விபரிப்பதில் உண்மைவாதப் புனைகதைகளின் உயர்நிலையைக் காட்டுகின்றன.

இவரது நூல்கள் சில:
1. போரும் அமைதியும்
2. மூன்று கேள்விகள்
3. ஒரு மனிதனுக்கு எவ்வளவு நிலம்
4. Anna Karenina
5. The Light Shines in Darkness

### சமூக விஞ்ஞான கற்கை வட்டம்

சமகால அரசியலிலும் சமூக வாழ்விலும் தொழிநுட்பத்திலும் நிகழும் முக்கிய நடப்புக்களை ஆழமாகக் கற்றறிந்துகொள்ளுமுகமாக வாரம் தோறும் வியாழக்கிழமைகளில் பிற்பகல் 5.30 மணிக்கு சமூக விஞ்ஞானக் கற்கை வட்டம் கூடுகிறது.

அரசியல், தொழிநுட்பம், சமூகம் எனப் பல்வேறு பரப்புக்களில் தெரிவு செய்யப்படும் தலைப்புக்களில் ஒவ்வொரு வாரமும் ஆழமான திறந்த கலந்துரையாடல் இடம்பெறும்.

நாம் வாழும் இந்தச் சமூகத்தைக் கற்றறிந்து புரிந்துகொள்ளவும் அப்புரிதலிலிருந்து இச்சமூகத்தை வளர்த்தெடுக்கவும் உங்கள் அனைவரையும் சமூக விஞ்ஞான கற்கை வட்டம் அழைக்கிறது.

**சமூக விஞ்ஞான கற்கை வட்டம்**
தேசிய கலை இலக்கியப் பேரவை,
571/15. காலி வீதி,
வெள்ளவத்தை
0772307807
0772260165

**Facebook group :**
facebook.com/groups/ssscircle/

**வலைத்தளம் :**
circle.thulaa.net

## பெரியபுராணமும் அதன் அரசியலும்

முன் பக்கத் தொடர்ச்சி..

* காவியத் தலைவனுக்குரிய பண்புகளில் அதிகமானவற்றை தன்வசம் கொண்டிருந்தமை, அதாவது ஏனைய நாயன்மாரை விடவும் இவரது வாழ்வு முழுமையானதாகவும், கௌரவமானதாகவும் இருந்தமை.
(திருஞான சம்பந்தர் கல்யாண மண்டபத்தில் எரித்துக் கொல்லப்பட்டது, அவர் பற்றி 1256 பாடல்களைப் பாடியபோதும் சேக்கிழாரால் அவரைத் தலைவராக்க முடியாமல் போனது. அத்துடன் அவர் 8000 வரையான சமணர்கள் கொல்லப்படவும் காரணமாக அமைந்தமை குறிப்பிடத்தக்கது.)

* (திருநாவுக்கரசர் சமணத்தில் இருந்து அதன் வளர்ச்சிக்கு அரும்பாடு பட்டதுடன், அம்மதத்தின் நற்கருத்துக்கள் பலவற்றைச் சைவத்துக்கு அறிமுகம் செய்தும் வைத்தவர். இறைவனுக்கு அடிமையாகவும், அரசனுக்கு "யாமார்க்கும் குடியல்லோம்....." என அடிபணியாத எதிர்ப்புணர்வுடனும், துறவியாக வாழ்ந்தவர். இவை சேக்கிழார் அப்பருடன் இணங்காமைக்குக் காரணங்களாகலாம்.)

* பக்தியியக்கத்தை நிறுவனமயப்படுத்திப் பதிவு செய்த பெரும் பணியை ஆற்றியமை
போன்றவற்றை விடவும்,

உலக வாழ்வைப் புறக்கணிக்காது இறை வழிபாட்டை சாத்தியப்படுத்தியமையினூடாக, துறவை வலியுறுத்திய சமண பௌத்த மதங்களை மக்களிடமிருந்து அந்நியப்படுத்த உதவியமை.
பிராமண குலத்தில் பிறந்து (இது புனைவாகக் கூட இருக்கலாம்) வேளாள குல மன்னனான நரசிங்க முனையாரின் பிள்ளையாக வழர்ந்ததன் காரணமாக அக்காலத்து நிலப்பிரபுத்துவச் சமூக அமைப்பில் முதன்மை பெற்று விளங்கிய இரண்டு சமூகங்களையும் பிரதிநிதித்துவப் படுத்துபவராகச் சுந்தரர் இருந்தமை.

அதேநேரம், இவரின் வாழ்வில் இடம்பெறும் விதவை (சங்கிலியார்), கோயிற் பரத்தை (பரவையார்) ஆகியோருடனான முற்போக்கான, மத சமூக ஒழுக்கத்தைக் கேள்விக்குட்படுத்தும் விடயங்களைத் தணிக்க முற்பிறப்புப் பற்றிய திருமலைச் சருக்கத்தைப் புனைந்துள்ளார்.

**மாணிக்கவாசகர் முற்றுமுழுதாகப் புறக்கணிக்கப்பட்டமை**

நான்கு நாயன்மார்களில் முக்கியமான ஒருவரான மாணிக்கவாசகர் நம்பிக்குப் பிறகு வாழ்ந்திருப்பினும் மிகவும் பிரபல்யமானவர், அப்படியிருக்க எவ்வாறு அவர் சேக்கிழாரால் தவிர்க்கப்பட்டார் என்பதற்கான காரணங்களை ஆராய்ந்தால்
அவர் சோழர்களின் ஜென்ம விரோதிகளான பாண்டியர் அரசவையில் முதலமைச்சராகப் பணியாற்றியமை,
அரசனுக்கு நம்பிக்கைத் துரோகம் செய்தமை,
ஆகியவற்றை இனங்காண முடியும்.

**உட் கூறப்பட்டுள்ள கதைகளில்:**

நந்தன் தீயிலிட்டுக் கொளுத்தப்பட்டமை, கண்ணப்பனின் கண்கள் தோண்டப்பட்டமை, சிறுத்தொண்டர் தாய் பிடிக்கப் பிள்ளையை அறுத்துக் கறி சமைத்;துக் கொடுத்தமை, இயற்பகை நாயனார் தனது சுற்றத்தினரைக் கொன்றொழித்து தனது மனைவியை அடியவருடன் உறவு கொள்ள அனுமதித்து இறுதியில் இருவரும் இறந்தமை போன்ற சம்பவங்களை நோக்குகின்றபோது, பூசலார் போன்ற பிராமணர்கள் இலகுவான வழியில் இறைவனை அடைவதையும், ஏனைய தாள்த்தப்பட்ட சாதிகளைச் சேர்ந்தோர் அவர்களின் சாதிப் படிநிலைக்கேற்ப வதைபடவேண்டி உள்ளமையைக் காணக்கூடியதாக உள்ளது. பெரிய புராணம் இவர்களின் பக்கம் நின்று இறுதியில் அவர்கள் வெற்றியடைவதுபோல் சித்திரிக்க முயல்கின்றது.

கண்ணப்பரின் கதையில் கிராமிய வழிபாட்டு முறையை எதிர்க்காமல் ஏற்றுக்கொள்வதாகக் காட்டப்பட்டுள்ளமை ஒரு சமரச முயற்சியாகத் தென்படுகின்றது.

## வரலாற்றுப் பொருள்முதல்வாதம்

*25-08-2011* அன்று உரையாடப்படவுள்ள விடயப்பரப்பு - சி. சிவசேகரம்

வரலாற்றியல் பொருள்முதல்வாதம் என்பது இன்னொரு வகைப் பொருள்முதல்வாதமல்ல.

அது சமூக ஆய்வு, பொருளியல், வரலாறு போன்ற துறைகளுக்கு இயங்கியல் பொருள்முதல்வாத அணுகுமுறையைப் பயன்படுத்தும் ஆய்வுமுறையைக் குறிக்கிறது. மாக்ஸ் அதனை "வரலாறு பற்றிய பொருள்முதல்வாதக் கருத்தியல்" என "அரசியற் பொருளியலின் விமர்சனத்துக்கு ஒரு பங்களிப்பு" என்ற நூலில் அதனைச் சுருக்கமாக எடுத்துரைத்தார்.

மனித இருப்பிற்குரிய உற்பத்தியில் மனிதர் தங்கள் விருப்புக்கட்கும் அப்பாற் திட்டவட்டமான உற்பத்தி உறவுகளுள் அமைகின்றனர்.

அவ் உறவுகளின் திரட்சி சமூகத்தின் பொருளியல் அமைப்பாக அமைகிறது. அவ் அமைப்பின் மீதே சட்டத்தையும் அரசியலையும் கொண்ட ஒரு மேற்-கட்டுமானமும் அதைச் சார்ந்து குறிப்பான உணர்வு நிலைகளும் அமைகின்றன.

பொருள் சார்ந்த உற்பத்தி முறை சமூக, அரசியல், ஆய்வறிவுச் செயற்பாடுகளின் பொதுவான விருத்திப் போக்கை ஆற்றுப்படுத்துகிறது. எனவே மனிதரின் உணர்வுநிலை அவர்களின் இருப்பைத் தீர்மானிப்பதற்கு மாறாக மனிதரின் இருப்பு மனிதரின் உணர்வுநிலையைத் தீர்மானிக்கிறது.

ஏதோ ஒரு நிலையில் சமூக உற்பத்திச் சக்திகள் உற்பத்தி உறவுகளுடன் கடுமையாக முரண்படுகையில் பழைய சொத்துடைமை உறவுகள் விருத்திக்குத் தடையாகின்றன. அதன் பயனாகச் சமூகப் புரட்சி உருவாகிறது. பொருளாதார அடித்தளமும் முழு மேற்கட்டுமானமும் மாற நேருகிறது. இம் மாற்றங்களை உணர்வு நிலைகள் மூலமின்றிப் பொருள்சார்ந்தே விளக்க இயலும்.
வரலாற்றியல் பொருள்முதல்வாதம் பின்வரும் நியதிகளின் அடிப்படையில் விருத்தி பெறுகிறது:

1. மனித சமுதாயத்தின் அடிப்படை மனிதர் தமது இருப்பிற்கான உற்பத்திக்காக இயற்கையுடன் பேணும் உறவு பற்றியது.
2. உற்பத்திக்கான உழைப்பு சொத்துடைமையின் அடிப்படையில் அமைந்த வர்க்கங்களிடையே பங்கிடப்பட்டுள்ளது.
3. வர்க்க அமைப்பு உற்பத்தி முறை மீது தங்கியுள்ளது.
4. உற்பத்தி முறை உற்பத்திச் சக்திகளின் நிலையில் தங்கியுள்ளது.
5. சமூக மாற்றம் ஆதிக்க வர்க்கத்திலும் மாற்றத்தைக் கொண்டுவருகிறது.

வரலாற்றியல் பொருள்முதல்வாத அணுகுமுறையின் பயனாக, அரசியல் நிகழ்வுகளையும் வரலாற்று நிகழ்வுகயையும் தனிமனித அடிப்படையிலன்றி வரலாற்று நிகழ்வுகளதும் அவற்றிக் சமூகக் கராணங்களதும் போக்கின் அடிப்படையில் விளங்கிக்கொள்ள இயலுமாகியுள்ளது.

முன்னைய அணுகுமுறைகள் விளக்கத் தவறிய மனித சமூகச் செயற்பாடுகளையும் வரலாற்றியலையும் வரலாற்றியல் பொருள்முதல்வாதம் விளக்க இயலுமாக்கியுள்ளது.

சமூக நீதிக்கான போராட்டங்கட்கும் சமூக மாற்றத்துக்குமான அதன் முக்கியமான பங்களிப்புக்களில் இரண்டைக் குறிப்பிடுவதாயின்:

1. வரலாற்றை விளங்கிக் கொள்வதில் வர்க்கப் போராட்டத்தின் தலைமைப் பங்கு அறியப்பட்டுள்ளது.

2. அதன் தர்க்கரீதியான நீட்சியாக மக்களே வரலாற்றின் உந்துசக்தி என்ற சனநாயகக் கோட்பாடு முக்கியத்துவம் பெற்றுள்ளது.

**சமூக விஞ்ஞான வட்டத்தின் செய்தி மடல்களைப் படியெடுக்கவும் அச்சிட்டுப் பகிரவும் அனைவருக்கும் உரிமையுண்டு. இதில் வெளிவரும் ஆக்கங்களை மூலத்தைக் குறிப்பிட்டு எங்கும் பிரசுரிக்கலாம்.**



சமூக விஞ்ஞான வட்டம் | செய்திமடல் - 14 | 25-08-2011